**16.06.2023 அ.வ.எண்.147/2011 பி.வா.சா.1 வேலாயுதம், த/பெ.சம்பத்**

**குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்தின் புல எண்.137(2ஏ5) ஆகும். 6 செண்ட் விஸ்தீரணம் ஆகும். எனது பட்டறையை ஒட்டி மேற்கில் உள்ள இடம் விவசாய நிலமாக உள்ளது என்றால் அது சரியல்ல. அது வீட்டு மனையாக உள்ளது. அந்த இடத்தில் வேர்க்கடலை உள்ளிட்ட புஞ்சை பயிர்கள் தற்போதும் பயிரிடப்படுகிறது என்பத சரிதான். ரோஸ் ஆச்சாரியின் கிஷ்டப்ப ஆச்சாரி என்பது சரிதான். ரோஸ் ஆச்சாரியின் மனைவி தான் வாதி என்பது சரிதான். வழக்கு சொத்து ஆதியில் கிஷ்டப்ப ஆச்சாரிக்கு தான் சொந்தமானது என்பது சரியல்ல. ரோஸ் ஆச்சாரியின் சகோதரர் வெள்ளை என்ற பட்டாபி ஆச்சாரி என்பது சரிதான். ரோஸ் ஆச்சாரியும் பட்டாபி ஆச்சாரியும் அவர்களது சொத்துக்களை 2000மாவது ஆண்டில் பாகம் பிரித்துக் கொண்டனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினையில் வழக்கு சொத்து ரோஸ் ஆச்சாரிக்கு கிடைத்து அது முதல் அவர் பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் அது சரியல்ல. பின்னிட்டு ரோஸ் ஆச்சாரி வாதிக்கு வழக்கு சொத்தை தானம் கொடுத்தார் என்பது சரியல்ல. வழக்கு சொத்தை தானம் பெற்றது முதல் வாதி தான் அனுபவிக்கிறார் என்பது சரியல்ல. ரோஸ் ஆச்சாரி சொந்த ஊர் இரும்பேடு கிராமம் என்பது சரிதான். அவர் செங்கல்பட்டு நகராட்சியில் பணிபுரிந்ததால் செங்கல்பட்டில் வசித்தார் என்பதும் சரிதான். தற்போதும் ரோஸ் ஆச்சாரி அவரது சொத்துக்களை பயிர் வைத்து அனுபவிக்கிறார் என்பது சரிதான். வா.த.சா.ஆ.1 பட்டா கிஷ்டப்ப ஆச்சாரி பெயரில் புல எண்.137/2ஏ5க்கு உள்ளது என்றால் ஆமாம். அந்த பட்டாவில் கண்ட சொத்துக்களை ரோஸ் ஆச்சாரியும், பட்டாபி ஆச்சாரியும் பிரித்துக் கொண்டனர் என்றால் அது எனக்கு தெரியாது. ரோஸ் ஆச்சாரிக்கு கிடைத்த பாதி பாகம் தான் வழக்கு சொத்து என்றால் அது சரியல்ல. ரோஸ் ஆச்சாரிக்கு கிடைத்த பாதி பாகம் புல எண். 137 /2ஏ 5ஏ என உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா எண்.859ன் படி தனிப்பட்டா வழங்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியவில்லை. மீதி உள்ள 2.5 ஏர்ஸ் வெள்ளை என்ற பட்டாபி ஆச்சாரிக்கு தான் உரிமையானது என்றால் அது சரியல்ல. அந்த 2.5 ஏர்ஸ் குப்பன் என்பவருக்கு சொந்தமானது என்பது தான் என் வழக்கு. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் அளந்த விவரம் எனக்கு தெரியவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கை விவரம் எனக்கு தெரியாது. ஆணையர் அறிக்கையில் வழக்கு சொத்தில் தென் வடலாக 150 அடி நீளத்திற்கு நான் சுவர் எழுப்பியுள்ளதாக கண்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. வழக்கு சொத்தில் நான் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளதாக நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு நான் தாக்கல் செய்த ஆட்சேபனையும் மறுநீதிமன்ற ஆணையர் நியமன கோரிக்கையும் நீதிமன்றத்தால் மறுக்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. என் தந்தை தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் விவரங்கள் எனக்கு தெரியாது. புல எண்.137/2ஏ5ல் மொத்த விஸ்தீரணம் 23 செண்டு என்றும் அதில் 6 செண்டு கிரையம் பெற்றதாகவும் என்

தந்தை சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியாதா எனக் கேட்டால் எனக்கு தெரியாது. அந்த புல எண்ணில் மொத்தமே 12 செண்டு தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. இந்த விவரத்தை எனது சாட்சிய வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்பது தெரியவில்லை. வழக்கு சொத்தின் புதிய புல எண்.137/15 என நான் சொல்வது சரியானது தான். வழக்கு சொத்துக்கான வருவாய் துறை ஆவணங்கள் என் பெயரில் உள்ளதை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா எனக் கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்கு வரி செலுத்தியதைக் காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா எனக் கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.5ல் நான் அடிக்கோடிட்டு காட்டிய சொத்து புல எண்.137/2ஏ என உள்ளது என்பது சரிதான். அந்த ஆவணத்தில் கண்ட வேதாச்சல ஆச்சாரி கிஷ்டப்ப ஆச்சாரியின் சகோதரர் என்பது சரிதான். பி.வா.சா.ஆ.5 வழக்கு சொத்துக்கு சம்மந்தப்பட்டது அல்ல என்பது சரியல்ல. பி.வா.சா.ஆ.1,2ல் கண்ட சொத்துக்கள் என் தந்தை பெயரில் பட்டாவாகியுள்ளது. அவற்றை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா எனக் கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். மாணிக்கவாசகம் என்பவர் என் பங்காளி. அவர் பட்டப்படிப்பு படித்துள்ளார். அவர் பி.வா.சா.ஆ.6ல் கோரியுள்ள தகவலே தவறானது என்பது சரியல்ல. பி.வா.சா.ஆ.6ல் கண்ட விவரங்கள் தவறானது என்றும் அந்த ஆவணமே என்னால் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் அது சரியல்ல. யூ.டி.ஆர்க்கு முந்தைய ஆவணங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் தான் இருக்கும் என்றால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ.6ல் கண்ட சிட்டா எந்த கிராமத்திற்கு உரியது என்ற விவரம் இல்லை என்றால் அது சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி - ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**